ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

25.12.2025

1. அன்னதான மகா சக்தியாக
அருட்தயவுமாக நிரம்பியே
மண்ணுலகை காக்க வேண்டி
மகானாய் அரங்கன் யான் அவதாரம்

2. அவதாரம் நிகழ்த்தி அற்புதம்
ஆறுமுகனார் சோதி கலந்து
அவணியில் அருட்சுவடி வழி பேசிட
அருளுவேன் விசுவாவசு சிலை திங்கள்

3. திங்களிலே ஈராம் குருவார அருளாசி
தெரிவிப்பேன் அரங்கன் யானுமே
ஓங்கார ஞானம் வழி உலகமே
ஒன்றிணைய வேண்டி அரங்கன் யான்

4. யானுமே முருகப்பெருமான் மேல்
உயர் வழிபாடுதனை உருவாக்கி
தானதரும நெறி முறையோடு
தலையாய பணி அன்னதானமே என

5. என தரும வழி காட்டியே
இவ்வுலகில் பசிபிணி விரட்டி
ஞானவான்கள் படை பெருக
ஞானிகள் பூசை முறை தனை

6. முறையாக மக்கள் பின்பற்றி
முழு சரணாகதி கொண்டுவர
அறமாக வழிகாட்டி அருள
அனைவரும் பிரணவக்குடில் நோக்கி

7. நோக்கி வந்து என் பீடத்தில்
நிகழும் வழிபாடு பூசை கலந்து
ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற
அருளமுதை உண்டு நன்கு

8. உண்டுமே நல்சிந்தை பெருக
உயிர்க்கொலை நீக்கி வாழ்வேன் என
தண்டனிட்டு வணங்கி உறுதி
தவசி என்பால் சரணாகதி கொண்டு

9. கொண்டுமே மாதருமம் தன்னில்
குறைவிலா பொருளுதவி செய்து
தொண்டர்களாகி இனிதே வாழ்வில்
தொடர்ந்து வந்து அரங்கன் என்வழி

10. என்வழி ஞானம் பயில
எல்லா சூட்சுமங்களும் விளங்கி
சண்முகனார் என்வழி அருளும்
சகல ஞானமும் தேறி இனிதே

11. இனிதே ஞானிகள் ஆவர்
இவ்வுலகையே மாற்றுகின்ற
கனிவேலவனார் ஞானப்படைகளாக
கடைத்தேற்றமும் கண்டடைவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி